www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

Language Code : **17**

इस पुस्तिका में **20** मुद्रित पृष्ठ हैं।
This booklet contains **20** Printed pages.

# SAS-24-I

## प्रश्न-पत्र-I / PAPER-I
## तमिल भाषा परिशिष्ट
## Tamil Language Supplement
## भाग-IV & V / PART-IV & V

मुख्य परीक्षा पुस्तिका संख्या / Main Test Booklet No.

मुख्य परीक्षा पुस्तिका कोड / Main Test Booklet Code

**K**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें। / FOR INSTRUCTIONS IN TAMIL SEE PAGE 2 OF THIS BOOKLET.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **K**। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं। **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा-I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

## INSTRUCTIONS FOR CANDIDATES

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page/ marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **K**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language-I (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language-II (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part-V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) / Roll Number : in figures ____________________
: शब्दों में / in words ____________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ____________________ निरीक्षक के हस्ताक्षर : ____________________
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile Signature Stamp of
Centre Superintendent : ____________________

Prepp Your Personal Exam Guide

Prepp
Your Personal Exams Guide

Language Code : **17**

# SAS-24-I

தேர்வு நூற்கட்டு
சங்கேதக் குறியீடு

**K**

**இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது**

**தாள்–I**

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

### பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள் :**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி-I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப்பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந்நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **K** ஆகும். இந்நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றேதானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இந்த தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி-IV : மொழி-I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி-V : மொழி-II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி-IV இல் மொழி-I க்கும், பகுதி-V இல் மொழி-II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
8. தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி-**I** (பகுதி **IV** இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி-**II** (பகுதி-**V** க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.
9. இத்தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________________

Facsimile signature stamp of Centre Superintendent : ____________________

Prepp
Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் **தமிழைத்**, **தமிழ்-I** மொழியாக தேர்ந்தெடுத்-திருந்தால் மட்டுமே **பகுதி-IV (கே.எண்: 91 - 120)** -க்கான விடை-களைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-IV (Q.No. 91-120)**, if they have opted **TAMIL** as **Language-I** only.

Prepp
Your Personal Exams Guide

## PART–IV

## LANGUAGE–I

## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 91 - 99)**

கடல் சிங்கத்தை பற்றிக் கேள்விப்பட்டிராத ஒருவருக்கு அது எவ்வகைப்பட்ட விலங்கு என ஐயமெழுவதில் ஆச்சரியமில்லை. பாலூட்டிகளைப் போல உரோமத்தால் ஆன மேல் தோலைக் கொண்டுள்ள அது, பாலூட்டிகளின் காலோடு சம்பந்தமில்லாத துடுப்புறுப்பையும் கொண்டுள்ளது. இறைச்சி தின்னும் பாலூட்டியாகிய இந்தக் கடல் சிங்கம் நெடுங்காலத்துக்கு முன்பே நீருறை வாழ்க்கையை மேற்கொண்டு விட்டது. நிலத்துவாழ் பாலூட்டி விலங்குகளிடத்தே காணப்படுவது போன்று தனது உறுப்புகளில் எலும்புகளைக் கொண்டிருக்கின்றது. மேலும், இதன் பற்களும் மண்டை-யோடும் இது ஊனுண்ணும் பாலூட்டி விலங்கோடு உறவுடையது என்பதைக் காட்டுகின்றன.

சீல் மற்றும் வால்ரஸ் பின்னிபெடியா என்ற உட்பிரிவில் அடங்கும். பின்னிபெடியா என்றால் 'துடுப்புக்காலின' என்று பொருள். இவை சிறிய வாலையுடைய பெரிய, கனத்த பாலூட்டிகள். இவற்றின் புறச்செவிகள் கண்ணுக்குத் தெரியா. இவற்றுள் நேர்த்தியான, மெதுரோமத்தை உடையவையும் உண்டு; சொரசொரப்பான ரோமத்தை உடையவையும் உண்டு. இவை மீன்கள், நண்டு, நத்தை மற்றும் சிப்பிகள், கடல் பறவைகள் முதலியவற்றைத் தின்னும்.

பின்னிபெடியா இன விலங்குகள் 2½ கோடி ஆண்டுகளுக்கு முன்தோன்றின. இவை ஆதிகாலத்து ஊனுண்ணி விலங்கான கிரியோ டொன்ட் பிரிவிலிருந்து கிளைத்தன என ஒருசார் விலங்கியலார் உரைக்க, பிறிதொரு சாரார் இவை நாய், கரடி, வீசல், நீர்க்கீரி முதலியவற்றை தோற்றுவித்த பிற்காலத்திய ஊனுண்ணி விலங்கு ஒன்றின் வழித்தோன்றல்கள் என உரைக்-கின்றனர். இவ்வகை விலங்கின் புதை வடிவம் ஒன்று சைபீரியப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இதன் காலம் 1 கோடி ஆண்டுகளுக்கு முந்தியது ஆகும்.

நீரில் வாழ்வதற்கேற்ற வண்ணம் சீல் மற்றும் வால்ரஸ்களின் உறுப்புக்களில் மாற்றம் ஏற்படலாயிற்று. காலின் மேல், கீழ் எலும்புகள் குறுகி, முன்னங்கால் பாதமும் பின்னங்கால் பாதமும் நீண்டன. விரல்களின் எண்ணிக்கை கூடவில்லை. கால்களுக்கிடையே மெல்லிய தோல் வளர்ந்து துடுப்பாகப் பயன்படலாயிற்று. இவை நீந்துங்கால், முன்னங்கால்கள் சுக்கானாகவும் பின்னங்கால்கள் வாலுக்குப் பதிலாகவும் பயன்படுகின்றன.

**91.** நீருறை ________ கொண்ட ஊனுண்ணும் ________.

(1) திறன், விலங்கு (2) பாலூட்டி, பறவை
(3) பண்பு, விலங்கு (4) வாழ்க்கை, பாலூட்டி

**92.** சுக்கானாக உள்ளது ________, பின்னங்கால் ________ பதிலானது.

(1) முன்னங்கால், வாலுக்கு (2) கீழ் எலும்பு, துடுப்புக்கு
(3) துடுப்பு, முன்னங்காலுக்கு (4) பின்னங்கால் பாதம், சுக்கானுக்கு

93. பிற்காலத்திய ஊனுண்ணும் விலங்கு ஒன்று தோற்றுவித்தவை :
(1) மீன்கள், சிப்பிகள், கரடி, நீர்க்கீரி
(2) நாய், கரடி, வீசல், நீர்க்கீரி
(3) நாய், மீன், நண்டு, நத்தை
(4) கரடி, நத்தை, வீசல், நீர்க்கீரி

94. கண்ணுக்குத் தெரியாதது ________, மெதுவான ________ சொரசொரப்பாகவும் உள்ளது.
(1) உரோமம், புறச்செவிகள் (2) பின்னங்கால், துடுப்புக்கால்
(3) புறச்செவிகள், உரோமம் (4) சிறியவால், உரோமம்

95. ________ செல்லும்போது, முன்னோக்கி வருவது ________.
(1) பின்னங்கால், கடல் சிங்கம் (2) பின்னங்கால், துடுப்பு
(3) கடல் சிங்கம், பின்னங்கால் (4) துடுப்பு, புறச்செவி

96. குறுகியது ________, நீண்டது ________.
(1) மேல்கீழ் கால் எலும்புகள், பின்னங்கால் பாதம்
(2) காலின் நடுப்பகுதி, பின்னங்கால் பாதம்
(3) பின்னங்கால் பாதம், காலின் எலும்பு
(4) வாலின் பகுதி, காலின் துடுப்பு

97. <u>விலங்கின்</u> புதைவடிவம் <u>கண்டெடுக்கப்பட்டது</u> - இலக்கணம் காண்க.
(1) செயப்பாட்டு வினை, செய்வினை
(2) ஐந்தாம் வேற்றுமை, செயப்பாட்டு வினை
(3) ஏழாம் வேற்றுமை, பிறவினை
(4) மூன்றாம் வேற்றுமை, தன்வினை

98. பாலூட்டிகளைப்போல ____________ கொண்டது, பாலூட்டிகளுக்கு இல்லாத ________ கொண்டது.
(1) பற்கள், மேல்தோல் (2) துடுப்புறுப்பு, உரோமம்
(3) உரோமம், துடுப்புறுப்பு (4) மேல்தோல், உரோமம்

99. சொரசொரப்பு, கிளைத்தன - இலக்கணம் தருக.
(1) அடுக்குத்தொடர், ஒன்றன்பால் வினைமுற்று
(2) உவமைத்தொகை, பலர்பால் வினைமுற்று
(3) இரட்டைக்கிளவி, பலவின்பால் வினைமுற்று
(4) எண்ணும்மை, வினைத்தொகை

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 100 - 105)**

வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?
தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்றா? - நடுங்கும் இடிக் குரலும்
மெல்லிசை பயின்று மிக இனிமை தந்ததுவோ?

வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்
தானூதும் வேய்ங் குழலா? யாழா? தனியொருத்தி
வையத்து மக்கள் மகிழ்க்குரல் எடுத்துப்
பெய்த அமுதா? என நானே பேசுகையில்
நீ நம்பாய் என்று, நிமிர்ந்த என் கண்ணோரில்
வானம் பாடிக் குருவி காட்சி வழங்கியது.
ஏந்தும் வான் வெள்ளத்தில் இன்ப வெள்ளம்
நீந்துகின்ற வானம் பாடிக்கு நிகழ்த்தினேன்.

உன்றன் மணிச் சிறகும் சின்னக் கருவிழியும்
என்றன் விழிகட்கே எட்டா உயர்வானில்
பாடிக் கொண்டே இருப்பாய்! பச்சைப் பசுந்தமிழர்
தேடிக் கொண்டே யிருப்பார் தென் பாங்கை உன்பால்!

அசையா மகிழ்ச்சி அடைக நீ! உன்றன்
இசைமழையால் இன்புறுவோம் யாம்.

**100.** பாடியவை ________, ________, நல்லிசை நல்கியது ________ என்பது வியப்பு.
(1) சிறுதும்பி, வானம், வானிலவு
(2) தேன், வானிலவு, சிறுதும்பி
(3) வானம், வானிலவு, சிறுதும்பி
(4) வானம், சிறுதும்பி, வானிலவு

**101.** நல்லிசை, மெல்லிசை - பிரித்து எழுதுக.
(1) நன்மை + இசை, மென்மை + இசை
(2) நன் + இசை, மென் + இசை
(3) நல் + இசை, மெல் + இசை
(4) நல்ல + இசை, மெல்லிய + இசை

**102.** கண்ணோராகக் காட்சி வழங்கியது ________, அது நீந்தியது ________.
(1) குருவி, காட்சி வெள்ளம்
(2) சின்னக் குருவி, காட்சி வெள்ளம்
(3) இன்பவெள்ளம், வானம்பாடி
(4) வானம்பாடி, இன்பவெள்ளம்

**103.** பாடலுக்கு இணையான சுவைப் பொருள்கள் இவை.
(1) அமுது, இன்பம்
(2) தேன், இனிமை
(3) தேன், அமுது
(4) இனிமை, இன்பம்

**104.** தமிழிசைஞன் ________, மேலிருப்பது ________, ஊதுவது ________.

(1) தனியொருவன், வானூர்தி, குழல்

(2) வல்லவன், வானூர்தி, குழல்

(3) வல்லவன், வேய்ங்குழல், வானூர்தி

(4) மகிழ்க்குரலன், குழல், வானூர்தி

**105.** <u>நீந்துகின்ற</u> வானம்பாடி - இலக்கணம் தருக.

(1) வினைத் தொகை (2) பெயரெச்சம்

(3) வினையெச்சம் (4) பண்புப் பெயர்

**106.** தொடக்கக் கல்வி நிலையில் நூலகத்தைப் பயன்படுத்துதல் பற்றிய கருத்தில் எது சரியானதில்லை ?

நூலகம் வெறும் நூல்களின் கிடங்கு எனப் பார்க்கப்படக் கூடாது, மாறாக :

(1) ஆசிரியர்களும், மற்ற பெரியவர்களும் நூலகத்தில் படித்து மாணவர்களுக்கு உதாரணமாக இருக்கலாம்

(2) நூல்களைக் குரல் விட்டு வாசிப்பதை நூலகத்தில் சிறப்பாகச் செய்யலாம்.

(3) மாணவர்களுக்கு குழந்தை இலக்கியங்களின் பல வகைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

(4) நூல்களுடன் உறவாட ஆற்றலுடைய சூழ்நிலை அது

**107.** ஒரு மொழி வகுப்பில் தம் பிறப்பிட மொழியை மாணவர்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்காத அணுகுமுறை / செயல்முறை எது ?

(1) நேரடி செயல்முறை (2) ஆடியோலிங்குவல் செயல்முறை

(3) இயற்கை அணுகுமுறை (4) தகவல் தொடர்பு அணுகுமுறை

**108.** எழுத்தறிவு பெற எதில் ஒருவர் முழுதிறன் பெற்றவராக இருக்க வேண்டும் ?

(1) பொருள் கூறல், மொழி புரிதல் திறன்

(2) துல்லியத்தன்மை, ஒலியன் அறிதிறன்

(3) ஒலியன் பற்றிய விழிப்புணர்வு, தெளிவொழுங்கு

(4) பார்ப்பவற்றை பெயர் சொல்ல அறிதல், வடிவத்தை அடையாளம் காணல்

**109.** தேசிய பாடத்திட்ட அமைப்பு வடிவம் (என்சிஎஃப்) தரும் கற்பித்தல் முறையில் உள்ளடக்கக்கூடிய, மகிழ்வான சூழலைத் தரும், இனிதான ஏற்பைக் கொண்ட இந்த துணை அமைப்பு கற்றல் திறன்களை உருவாக்கக் கூடியதாகவும் மாணவர்களின் பங்கேற்பைப் பெறுவதாகவும் உள்ளது, இதனைச் செய்ய சிறந்த முறை :

(1) மாணவர்களின் வளர்ச்சிக்களத்தின் வெவ்வேறு நிலைகளில் செய்யப்படும் பணிகளைப் பார்வையில் வைத்தல்.

(2) வகுப்பறையை வண்ணமயமான சூழலுக்கு அலங்கரித்தல்.

(3) கடும் வெப்ப நிலையில் வெளிப்புறச் செயல்பாடுகளைத் தவிர்த்து உட்புறச் செயல்பாடுகளை நிகழ்த்துதல்.

(4) மாணவர்களின் உடல் நலம், நல்ல உடல் நிலை இரண்டுக்கும் அதிக முக்கியத்துவம் தருதல்.

Prepp
Your Personal Exams Guide

**110.** நடப்பு வாழ்க்கைச் சூழலில் மொழியைப் பயன்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட மாணவர்களை நடத்திச் செல்லும் அணுகுமுறை / செயல்முறை எது ?

(1) நேரடி முறை (2) ஆடியோ லிங்குவல் முறை

(3) இயற்கை அணுகுமுறை (4) தகவல்தொடர்பு அணுகுமுறை

**111.** ''எனது கட்டுரையை ஆசிரியரிடம் தருவதற்கு முன் கடைசியாக அதன் சரித் தன்மையை ஒருமுறை பரிசோதனை செய்கிறேன்'' என ஐந்தாம் வகுப்பு மாணவர் ஒருவர் சொல்கிறார். எழுத்துப் பணியில் எந்த கட்டத்தில் மாணவர் இருக்கிறார் ?

(1) பிழைத்திருத்தம் செய்தல் (2) உடன்பயில்வோர் மதிப்பீடு செய்தல்

(3) வரைவு எழுதுதல் (4) மறு வரைவு எழுதுதல்

**112.** மூன்றாம் நிலை ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பில் வாசித்தலுக்கான பகுதியை உருவாக்க விரும்புகிறார். குழந்தைகளுக்கான புத்தகங்களைத் தேர்வு செய்வதில் மிகமிகத் தேவையான விதிமுறை எது ?

(1) மூன்றாம் நிலை பாடத்திட்ட முறையின் நோக்கத்திற்கு உகந்தவைகளாக நூல்கள் உள்ளனவா எனப் பார்த்தல்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட கற்பித்தல் பின்புலத்திற்கு பயன்படும் வகையில் நூல்கள் அமைந்துள்ளனவா எனப் பார்த்தல்.

(3) எழுத்தாளர்கள் நன்கு அறியப்பட்டவர்களாக, குழந்தை இலக்கியத்தில் மதிப்பு பெற்றவர்களா எனப் பார்த்தல்.

(4) பெரும்பான்மையான குழந்தைகள் தாமே வாசிக்கக்கூடிய வகையில் நூல்கள் எழுதப்பட்டுள்ளனவா எனப் பார்த்தல்.

**113.** இரண்டாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் தன் மாணவர்களுக்காக கற்பித்தல் கற்றல் பாடத் துணைப் பொருள்களைச் சேகரிக்கத் திட்டமிடுகிறார். இதில் பொருந்தாத விதிமுறை ஒன்று :

(1) உள்ளூரில் செய்யப்பட்டதாக அல்லது கிடைக்கக் கூடியதாகப் பொருள்கள் இருக்க வேண்டும். எளிதில் பதிலீடு செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(2) பொருள்கள் குழந்தைகளால் செய்யப்பட்டதாக மட்டுமே இருக்க வேண்டும், வழுக்கிச் செல்லாத கடினமான பொருள்களால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

(3) அந்த வயது குழந்தைகளுக்கு பாதுகாப்பானதாகவும் கருத்தைக் கவரும் வகையிலும் பொருள்கள் இருக்க வேண்டும்.

(4) குழந்தைகள் ஆர்வத்துடன் ஊடுறுவிப் பார்த்து பரிசோதனை செய்யத்தக்கதாகப் பொருள்கள் இருக்க வேண்டும்.

**114.** மூன்றாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் தன் மாணவர்களிடம் 'இயலுமா' என்ற சொல்லைப் பயன்படுத்தி ஐந்து கேள்விகளைத் தம் பெற்றோர்களிடம் கேட்கச் சொல்கிறார். எ.கா. நீந்த இயலுமா? இந்தச் செயல்பாடு எதற்கானது?

(1) சுதந்திரமான பேச்சு

(2) ஏற்புநிலை கவனித்தறிதல்

(3) வாழ்மொழிப் பேச்சுச் சரளநிலை பயிற்சி

(4) கட்டுப்படுத்தப்பட்ட வாய்மொழிப் பயிற்சி

**115.** எழுத்துகள் மற்றும் ஒலிப்புகளுக்கிடையில் உள்ள உறவுக்கு முக்கியத்துவம் தரும் எழுத்தறிவு கற்பித்தல் அணுகுமுறை :

(1) சூழ்நிலை அணுகுமுறை (2) ஒலியியல் கற்பித்தல்

(3) மொழி முழுமை அணுகுமுறை (4) இலக்கண மொழிபெயர்ப்பு

**116.** இலக்கணத்தை ஆற்றல்திறனுடன் கற்பிப்பது குறித்த கருத்தில் எது சரியில்லாதது ?

(1) தகவல்பரிமாற்றத்தில் பயிற்சி அளித்தல்

(2) இலக்கண விதிகளை மனப்பாடம் செய்வதன் வழியாக இலக்கணம் கற்றல்.

(3) நம்பகத்தன்மை கொண்ட தகவல் தொடர்பை அளித்தல்

(4) பொருத்தமான இலக்கண விதிகளை எடுத்துரைத்தல்

**117.** அடிப்படைக் கல்வி நிலைக்கான பாட நூலை உருவாக்குவதற்கான கொள்கை நெறி அல்லாத ஒன்று எது ?

(1) திடமான கொள்கைநெறி (2) தொழில்நுட்ப கொள்கைநெறி

(3) பாடத்திட்ட கொள்கைநெறி (4) எடுத்துரைத்தல் விளக்குதல் கொள்கைநெறி

**118.** அடிப்படைக் கல்வி நிலையில் குழந்தைகள் இதனைச் செய்யும்போது கற்றலில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

(1) அவர்கள் மீண்டும் மீண்டும் எழுத்துகளின் மீது எழுதுகின்றனர், அல்லது குறிப்பேட்டில் எழுத்துகளை எழுதுகின்றனர்.

(2) 'ஃபைன் மோட்டார் ஸ்கிள்ஸ்' மீது கவனம் செலுத்தி மேம்படுத்துதல் மட்டுமே முக்கியம்.

(3) ஆசிரியருடன் இணைந்து சிறுவர் பாடல்களைப் பாடுகின்றனர்.

(4) அவர்கள் பல புலன்களைப் பயன்படுத்துகின்றனர், தமது கைகளை செயல்பாட்டுடன் பயன்படுத்துகின்றனர்.

**119.** பின்வரும் வாக்கியம் பற்றிய கருத்தில் எது சரியில்லாதது ?

மழலைப் பாடல்கள், பாடல்கள், ஓதுதல்கள் என்பவை குழந்தைகளுக்கு இதனைக் கற்பிக்கும் வழியாகிறது :

(1) உச்சரிப்பை பயிற்சி செய்தல்

(2) வாக்கியங்களின் உணர்ச்சி வெளிப்பாடு மற்றும் தாளகதியை மேம்படுத்துதல்

(3) விரிவான சொல்வளம்

(4) சொற்கள், வாக்கிய அமைப்புகளை மனப்பாடம் செய்தல்

**120.** மாணவர்கள் தம் பயிற்சி ஏடுகளைப் பரிமாற்றம் செய்து கொண்டு, ஒருவருடைய பயிற்சி எழுத்தை மற்றவர் சரிபார்க்கும்படி ஓர் ஆசிரியர் கேட்கிறார். இந்தப் பயிற்சிப் பணியின் நோக்கம் என்ன?

(1) அமைப்புகள் குறித்த கட்டுப்பாடுகள் கொண்ட பயிற்சி அளித்தல்

(2) சக மாணவர்களுக்கிடையிலான சரிபார்ப்புத் திறனை மேம்படுத்தல்

(3) விரிவான வாசிப்புக்கான பயிற்சி அளித்தல்

(4) புதிய சொற்களைப் பயன்படுத்தப் பயிற்சியளித்தல்

Prepp
Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் **தமிழைத், தமிழ்-II** மொழியாக தேர்ந்தெடுத்-திருந்தால் மட்டுமே **பகுதி-V (கே.எண்: 121 - 150)** -க்கான விடை-களைத் தர வேண்டும்.

Candidates should attempt the questions from **Part-V (Q.No. 121-150)**, if they have opted **TAMIL** as **Language-II** only.

→

## PART–V

## LANGUAGE–II

## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 121 - 128)**

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள இலக்கணங்களையுடைய பரிபாடல்கள் இவையில்லை. அவ்விலக்கணங்களையுடைய பரிபாடல்கள் இறந்தொழிந்தன. தலைச் சங்கத்தார் பாடியதாக வரும் 'எத்துணையோ பரிபாடல்களின்' அமைதியைக் கொண்டது தொல்காப்பிய இலக்கணம். ஆதலால், பாடலமைதியாலும் பொருள் வகையாலும் இம்மாற்றங்களையடைய நெடியகாலம் ஆகியிருக்க வேண்டும் என்பதே அது.

தொல்காப்பியர் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என்பவற்றை எழுத்தளவையால் சுட்டுகிறார். அவ்வடிவகை கட்டளையடி எனப்படும். அவ்வாறாகவும் சங்கப் பாடல்கள் சீர்வகை அடியைக் கொண்டனவாக உள்ளனவேயன்றிக் கட்டளையடி வழியமைந்தவையாக இல்லை. முற்றாக இம்மாற்றம் அமைய வேண்டுமானால் நெட்ட நெடுங்கால இடைவெளி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

தொல்காப்பியர் நேர், நிரை அசைகளுடன் நேர்பசை, நிரைபசை என்பவற்றையும் குறிக்கிறார். இந்நேர்பசை நிரைபசையை வேறு எவ்விலக்கண ஆசிரியரும் கொண்டிலர்; நேர் நிரை என்னும் இருவகை அசைகளையே கொண்டனர். கட்டளையடி பயிலாமை போலவே, இவ்வசைகளும் பயிலாமை தொல்காப்பியப் பழமையை விளக்குவதேயாம். யாப்பருங்கலத்திற்கு முற்பட்டது காக்கை பாடினியம். அந்நூலிலும் அவிநயம் முதலிய நூல்களிலும் இவ்விருவகை அசைகளும் இடம் பெறாமையால் இவற்றுக்கு மிகமுற்பட்ட நூல் தொல்காப்பியம் என்பது விளங்கும்.

பாட்டு யாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுசொல் யாப்பு என எழுவகை யாப்புகளை எண்ணுகிறார் தொல்காப்பியர். இவற்றுள் பாட்டுயாப்பு நீங்கிய எஞ்சிய யாப்புகள் எவையும் அறியுமாறு நூல்கள் வாய்த்தில. ஆகலின் அந்நிலை தொல்காப்பிய அறப்பழமை காட்டும்.

**121.** கட்டளையடி _________, நேர்பசை நிரைபசை இல்லாதது________.

(1) அவிநயம், தொல்காப்பியம்
(2) பரிபாடல், அவிநயம்
(3) அளவடி, காக்கைப் பாடினியம்
(4) காக்கைப் பாடினியம், தொல்காப்பியம்

Prepp
Your Personal Exams Guide

**122.** பிற்கால இலக்கண ஆசிரியர் கொள்ளாதது ________, நேரசை நிரையசை நூல் ________.

(1) நேர்பசை நிரைபசை, யாப்பருங்கலம்
(2) இயலசை, தொல்காப்பியம்
(3) யாப்பருங்கலம், தொல்காப்பியம்
(4) கட்டளையடி, தொல்காப்பியம்

**123.** யாப்பு வகை ________, கட்டளையடி வகை ________.

(1) ஐந்து, ஏழு
(2) இரண்டு, ஏழு
(3) ஏழு, ஐந்து
(4) நான்கு, மூன்று

**124.** தொல்காப்பியப் பழமைக்குச் சான்று :

(1) நேரசை நிரையசை, உரையாப்பு, பாட்டுயாப்பு
(2) அங்கத யாப்பு, நேரசை நிரையசை, கட்டளையடி
(3) பிசியாப்பு, நேர்பசை நிரைபசை, கட்டளையடி
(4) பாட்டுயாப்பு, கட்டளையடி, நேரசை நிரையசை

**125.** யாப்பிலக்கணம் கூறும் நூல்கள் :

(1) தொல்காப்பியம், சங்க இலக்கியம், அவிநயம்
(2) காக்கைப்பாடினியம், பரிபாடல், யாப்பருங்கலம்
(3) தொல்காப்பியம், அவிநயம், காக்கைப்பாடினியம்
(4) பரிபாடல், அவிநயம், தொல்காப்பியம்

**126.** 'எழுத்தளவை' - இலக்கணம் தருக.

(1) மூன்றாம் வேற்றுமைத் தொகை
(2) நான்காம் வேற்றுமைத் தொகை
(3) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
(4) எட்டாம் வேற்றுமைத் தொகை

**127.** கட்டளையடிக்கு ________, சீர்வகை அடியாலானது ________.

(1) எழுத்தளவை, சங்க இலக்கியம்
(2) நற்றிணை, கட்டளையடி
(3) பரிபாடல், கட்டளையடி
(4) சங்க இலக்கியம், பரிபாடல்

**128.** கட்டளையடி வரிசை :

(1) அளவடி, நெடிலடி, சிந்தடி, குறளடி, கழிநெடிலடி
(2) சிந்தடி, குறளடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி
(3) கழிநெடிலடி, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி
(4) குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி

Prepp
Your Personal Exams Guide

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 129 - 135)**

1856 -ல் கால்டுவெல் பாதிரியாரின் **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** வெளிவந்தது. மொழியியலைத் தமிழியல் ஆய்வின் ஓர் அம்சமாக இப்பிரசித்தி பெற்ற நூல் ஆக்கி வைத்தது. அதைப் போலவே மொழியியல், சமூகவியல், வரலாறு முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்த இலங்கை யரான சைமன் காசிச் செட்டி (1807-1860) வெளியிட்ட தமிழ்ப் புலவர் சரிதமான (1859) இலக்கிய வரலாற்றுத் துறைக்கு வித்திட்டது. அதனை சி.வை. தாமோதரம்பிள்ளை, வி. கனகசபைபிள்ளை, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை முதலியோர் மேலும் மெருகூட்டி வளர்த்தனர்.

இத்தகைய ஆய்வாளர்களும் புதுமையான நாவல் இலக்கிய வடிவத்தைக் கையாண்டு எழுதிய படைப்பாளிகளும் நவீன இலக்கியங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாததான உரைநடையை உருவாக்கினர். நவீனத்துவம் குறிக்கும் பண்புகளாம் வரலாற்று நோக்கு, ஆய்வறிவு, சமூகச்சார்பு, தற்புதுமை, தனித்துவம், எளிமை, பொதுமக்கள் நலநாட்டம் முதலியனவெல்லாம் உரைநடையின் வாயிலாகவே இலகுவாகவும் விரைவாகவும் தெளிவாகவும் இலக்கியங்களால் உணர்த்தப் பெற்றன. ஆகவே உரைநடையும் நவீனத்துவமும் உடன்பிறப்புகள் என்று கூறுவதில் தடையில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிற்கூட உரைநடை அருந்தலாகவே பயின்று வந்தது. பிரதான தொடர்பு சாதனமாக அது அக்காலகட்டத்திலும் அமைந்திருக்கவில்லை. இம்மென்றால் நூறும், ஏனென்றால் இரு நூறும் செய்யுள்களாகப் பாடிக் குவிக்க வல்லவர்கள், செறிவான சில வசனங்களை எழுதும் பயிற்சியும் பக்குவமும் இல்லாதிருந்தனர். பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழக வகுப்புவரையில் வசன நடையிலமைந்த பலதுறை சார்ந்த நூல்கள் வழங்கும் இக்காலத்திலே, உரைநடை பெருவழக்கு அற்றிருந்த நிலைமையைக் கற்பனை செய்வதுதானும் கடினமாயிருக்கும். ஆனால் 19 -ஆம் நூற்றாண்டிலே நவீன இலக்கியங்களைப் படைக்க முற்பட்டவர்களின் பின்னணியைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கு இச்செய்தி முக்கியமானதாகும். 1862-ம் வருடத்தில் எம். உவின்சுலோ என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் **தமிழ்-ஆங்கில அகராதி** ஒன்றை வெளியிட்டார். இராமானுசக் கவிராயர், வீராசாமிச் செட்டியார், விசாகப் பெருமாளையர் முதலிய தமிழ்நாட்டுப் புலமையாளரும் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் முதலிய இலங்கைத் தமிழ் அறிஞரும் இவ்வகராதித் தொகுப்பிற்குப் பெரிதும் துணைபுரிந்தனர்.

**129.** மொழிகளின் ஒப்பிலக்கணம் - இலக்கணம் தருக.

(1) எட்டாம் வேற்றுமை (2) இரண்டாம் வேற்றுமை

(3) ஐந்தாம் வேற்றுமை (4) நான்காம் வேற்றுமை

**130.** நவீனத்துவத்தின் பண்புகள் :

(1) ஆய்வறிவு, சமூகச் சார்பு, தனித்துவம்

(2) பழமை, சமூகச் சார்பு, தற்புதுமை

(3) தனித்துவம், எளிமை, ஆய்வறிவின்மை

(4) வரலாற்று நோக்கு, பழமை, சமூகச் சார்பு

Prepp
Your Personal Exams Guide

**131.** தமிழ்நாட்டுப் புலமையாளர்கள் :

(1) நெவின்ஸ், சைமன் காசிச் செட்டி

(2) நெவின்ஸ், கால்டுவெல்

(3) கால்டுவெல், இராமானுசக் கவிராயர்

(4) இராமானுசக் கவிராயர், வீராசாமிச் செட்டியார்

**132.** உரைநடை ________, உரைநடையும் நவீனத்துவமும் ________.

(1) இலகுவானது, உடன்பிறப்புகள்

(2) கடினமானது, உடன்பிறப்புகள்

(3) நவீனமானது, விலகிச் செல்வது

(4) பழமையானது, தொடர்பில்லாதது

**133.** நவீன இலக்கியத்துக்கு அடிப்படையானது :

(1) ஓவியம் (2) உரைநடை (3) அகராதி (4) இலக்கணம்

**134.** மொழியியல் நூல் ________, உவின்சுலோ எழுதியது ________.

(1) உவின்சுலோ அகராதி, திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம்

(2) திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம், தமிழ்ப்புலவர் சரிதம்

(3) திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம், தமிழ் ஆங்கில அகராதி

(4) தமிழ்ப் புலவர் சரிதம், திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம்

**135.** தமிழ்ப் புலவர் சரிதத்தைச் செப்பம் செய்தவர்கள் :

(1) கால்டுவெல், உவின்சுலோ

(2) உவின்சுலோ, வி. கனகசபைப் பிள்ளை

(3) வி. கனகசபைப் பிள்ளை, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

(4) சி. வை. தாமோதரம்பிள்ளை, கால்டுவெல்

**136.** ஒரு இரண்டாம் மொழியைக் கற்கச் சிறந்த வழி :

(1) ஒலிப்பதிவு முறையில் உரையாடல்களைக் கேட்டு மீண்டும் மீண்டும் பயிற்சி செய்தல்

(2) கற்க வேண்டிய மொழிக்கான பேச்சு முறை வகுப்பில் சேருதல்

(3) இலக்கணத்தில் நீங்கள் கவனம் செலுத்தும் போது ஆசிரியரிடம் இருந்து உதவி பெறக்கூடிய வகையில் அமைந்த வகுப்பறை

(4) தமது சமூகத்தினருடன் தொடர்ந்து தொடர்பு கொண்டவராக இருத்தல்

**137.** குழந்தைகள் தம் சூழலில் இரண்டு மொழிகள் பேசப்படுவதைக் கேட்கின்றன, இந்த வகையில் இரண்டு மொழிகளுடன் பழகுவது :

(1) எந்த வேறுபாட்டையும் உருவாக்குவதில்லை

(2) புரிதலில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

(3) குழந்தைகளுக்குத் தடையை உருவாக்குகிறது

(4) குழந்தைகளுக்கு நல்வாய்ப்பாக அமைகிறது

**138.** ஆசிரியர் தரும் மாதிரி வாக்கியங்களைத் திரும்ப எழுதுவதன் வழியாக மொழியின் வகைமாதிரியைக் கற்கின்றனர் மாணவர்கள். தொடர்களை மனப்பாடம் செய்யும் மாணவர்கள் மீள்பயிற்சிகளைச் செய்யும் போது உடன்பாடான கூடுதல் குறிப்புகளை ஆசிரியரிடமிருந்து பெறுகின்றனர். ஆசிரியர் பயன்படுத்துவது :

(1) முழு உடல்சார் பதில் வினை

(2) அமைப்பியல் அணுகுமுறை

(3) ஆடியோ லிங்குவல் முறை

(4) தகவல் தொடர்பு அணுகுமுறை

**139.** இந்த வாசிப்பு முறை சில கற்றல் நோக்கங்களையும் பணிகளையும் கொண்டுள்ளது. மாணவர்கள் மிகக் கவனமாக, அக்கறையுடன் முழு விபரம் புரிந்து வாசிக்க வேண்டும்.

(1) வழிநடத்தப்படும் வாசிப்பு

(2) மகிழ்வுக்கான வாசிப்பு

(3) விரிவான வாசிப்பு

(4) செறிவான வாசிப்பு

**140.** ஓர் ஆசிரியர் செய்தித்தாளில் இருந்து சுவையான கட்டுரை ஒன்றை வாசித்து, வகுப்பில் உள்ள மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அக்கட்டுரை பற்றிப் பேசச் சொல்கிறார். இந்த வகை பேச்சுப் பயிற்சிப் பணி எதற்கானது ?

(1) வழிகாட்டுதல் பேச்சுமொழிப் பயிற்சி

(2) செயல்திறன் கொண்ட கவனிப்பு

(3) பேச்சுமொழி சரளத்தன்மைக்கான பயிற்சி

(4) கட்டுப்படுத்தப்பட்ட பேச்சுமொழிப் பயிற்சி

**141.** குழந்தைகளின் அறிவுத்திறன் வளர்ச்சி மற்றும் மொழி :

(1) இரண்டின் வளர்ச்சிக்கும் உறவில்லை

(2) குழந்தைகள் வளரும் பண்பாடு மற்றும் சமூகக் குழுக்களுடன் நெருக்கமான உறவுடையது

(3) தூண்டுதல் - ஏற்புச் செயல் இணைந்த, போலச் செய்தல் செயல்பாடு பற்றிய கொள்கை நெறியுடன் தொடர்புடையது

(4) ஒரு தனி மனிதர் மொழியைக் கற்றுத் தேர்வதற்கான புலன்கருவியுடன் பிறக்கிறார்

**142.** தொடக்க நிலைக் கல்வியில் வாசித்தல் திறனை மதிப்பிட ஓர் ஆசிரியர் அதிகமாக இதில் கவனம் செலுத்த வேண்டும்.

(1) சரியான வேகத்தில் வாசித்தல்

(2) புரிந்து கொண்டு வாசித்தல்

(3) அகர வரிசை எழுத்துகளை அடையாளம் காணுதல்

(4) நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தல்

**143.** மொழி முழுமை அணுகுமுறை என்பது :

(1) ஒலிகளைக் கலத்தல்

(2) ஒலி - குறி உறவை அனுமானித்து அறிதல்

(3) மொழிப்பொருளை அடிப்படையாகக் கொண்டது

(4) திறமையை அடிப்படையாகக் கொண்டது

**144.** ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவர்களை ஒரு கதையை விரைவாகப் படிக்கச் செய்து நான்கு படங்களை ஒரு வரிசையில் வைக்கிறார். இந்தச் செயல்பாட்டின் நோக்கம் :

(1) குறிப்பிட்ட தகவலுக்காகப் படிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்

(2) கதையில் உள்ள புதிய, கடினமான சொற்களை மறுபார்வை செய்வது

(3) பட அட்டைகளை வரிசைப்படுத்துவது

(4) கதைச் சுருக்கத்தைத் தெரிந்து கொள்ளும் வாசிப்புக்குப் பயிற்சி அளித்தல்

**145.** மொழி கற்றல் என்பது பிறப்பில் தொடங்கி வாழ்க்கை முழுதும் தொடரும் ஒரு செறிவான செயல்முறை.

இந்தக் கருத்துடன் நீங்கள் உடன்படுகிறீர்களா, மறுக்கிறீர்களா ?

(1) ஒரு பகுதி கருத்தை ஏற்கிறேன்

(2) ஒரு பகுதி கருத்தை மறுக்கிறேன்

(3) இக்கருத்துடன் உடன்படுகிறேன்

(4) இக்கருத்தை மறுக்கிறேன்

**146.** அடிப்படைக் கல்வி நிலையில் மதிப்பிடுதல் கருவிகளும், செயல்பாடுகளும் இவ்வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் :

(1) வகுப்பில் செய்யப்படும் ஒட்டு மொத்தப் பயிற்சியை வைத்து மாணவர்களின் முன்னேற்றம் விவரிக்கப்படவும், பகுத்தாயப்படவும் வேண்டும்

(2) அனைத்து மாணவர்களின் கற்றல் விளைவுகளும் ஒரே முறையைப் பயன்படுத்தி ஆசிரியரால் மதிப்பிடப்பட வேண்டும்.

(3) வெளிப்படைத் தேர்வும், எழுத்துத் தேர்வும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும்

(4) குழந்தையின் கற்றல் அனுபவத்தின் இயல்பால் நீட்சியாக அவை அமைய வேண்டும்.

**147.** மாணவர்கள் இலக்கண விதிகளையும் சொல்வளத்தையும் மனப்பாடம் செய்கின்றனர், தமது தாய்மொழியில் நிறைய பயிற்சிகளைச் செய்கின்றனர். இந்த மொழி வகுப்பில் ஆசிரியர் பயன்படுத்தும் முறை எது ?

(1) தகவல் தொடர்பு கற்பித்தல்

(2) இலக்கண மொழிபெயர்ப்பு

(3) நேரடி முறை

(4) இயற்கை அணுகுமுறை

**148.** ஒரு வகுப்பறையில் அச்சு நூல்கள், ஒலிப்பதிவு நூல்கள், குழந்தைகள் தொட்டு அறியும் திறனை வளர்க்கக்கூடிய நூல்கள் அனைத்தும் இடம்பெற வேண்டும் :

(1) விதவிதமான மாணவர்களுக்கு நூல்கள் அதிகமாகக் கிடைப்பதை அது சாத்தியமாக்கு-கிறது

(2) இந்த நூல்கள் ஒரு ஆசிரியருக்கு கூடுதல் சுமையாக இருப்பதில்லை.

(3) வகுப்பறையில் வகைமைகளைக் கொண்டு வருகிறது, குழந்தைகள் வகைமைகளை விரும்புகிறார்கள்

(4) வெவ்வேறு நூல்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யும் தற்சார்பை ஆசிரியர்களுக்கு அது வழங்குகிறது

**149.** வாசிக்கக் கற்பதில் உள்ள பெரிய சவால், மாணவர்களிடம் ஊக்கநிலை இருப்பது, மற்றும் நல்ல குழந்தைகளுக்கான இலக்கியத்தைக் கண்டுபிடிப்பது. இந்த சவாலை எதிர்கொள்ளச் செய்ய வேண்டியது :

(1) எளிதாகக் கிடைக்கும் குழந்தை இலக்கியத்தைக் கொண்டு ஊக்கமளித்து, வாசிக்க ஆர்வமூட்டுவது

(2) புத்தகக் கண்காட்சிகளுக்கு மாணவர்களைப் பள்ளி நிர்வாகம் அழைத்துச் சென்று நூல்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவது.

(3) மாணவர்கள் வீட்டுப்பாடமாகத் தினம் ஒரு புத்தகம் படிக்கும்படி ஊக்குவிப்பது

(4) பெற்றோர்கள் வீட்டில் சிறிய ஒரு நூலகத்தை வைக்க ஊக்கப்படுத்துவது

**150.** நல்ல பேச்சுப் பயிற்சிப் பணியில் இது நிகழ வேண்டும் :

(1) மாணவர்கள் அதிகமாகப் பேசுகின்றனர்

(2) அதிகம் பேசக்கூடிய மாணவர்கள் கூடுதலாகப் பங்கேற்கின்றனர்

(3) ஆசிரியர் அதிகமாக விளக்குகிறார்

(4) மாணவர்கள் அதிகமாகக் கவனிக்கின்றனர்

- o O o -

SPACE FOR ROUGH WORK

Prepp
Your Personal Exams Guide

**: கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் **பக்கம் 2**-ல் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் **நீலம்/கருப்பு பந்துருள்முனைப் பேனா**வினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும். குறியீடு செய்யப்பட்ட விடையை மாற்ற இயலாது.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச்சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப்பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டு வரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கை களுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும். **மேலும், தேர்வர்கள் தங்களது இடது பெருவிரல் அடையாளத்தை வருகைப் பதிவுத் தாளில், ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பதிவு செய்யவேண்டும்.**
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்து விதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச்சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. **தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத்தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.**

Prepp
Your Personal Exams Guide

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **नीले/काले बॉल पॉइन्ट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के कोड या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका कोड व संख्या को परीक्षार्थी सही तरीके से उपस्थिति-पत्र में लिखें।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और परीक्षार्थी विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं उपस्थिति-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार उपस्थिति-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान उपस्थिति-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी परीक्षण संस्था के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला परीक्षण संस्था के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी भी परिस्थिति में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र निरीक्षक को अवश्य सौंप दें।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Blue / Black Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against the candidate including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Examining Body with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Examining Body.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***